அனுப்புகிறோம் என்று நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு எழுதி இருந்தது. அதை வைத்தும், நாம் பஞ்சாபிடமிருந்து அரிசியைப் பெற மத்திய அரசாங்கம் அனுமதி தரவேண்டுமென்று வற்புறுத்தினோம். இன்னும், பஞ்சாப் மாநிலத்திலே உபரியாக இருப்பதை வாங்கித் தருகிறோம் என்று, கூட்டுறவு ஸ்தாபனங்களும் கேட்டிருக்கின்றன. அதற்கும் அனுமதி தரவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறோம்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*276 வினா—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகப்பெரிய பரப்பளவுள்ள கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) : இம் மாநிலத்தில் நிர்வாகத்திற்கு எளிதாயிராமல் மிகப் பெரிய அளவிலான ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. புதிதாக ஏற்படுத்தப்படும் ஒன்றியங்களுக்குத் தேவையான அலுவலர்கள், பணியாளர்கள், மற்றும் கட்டடங்களுக்காகும் செலவினங்களைக் கணக்கிட்டு அரசு நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு இது பற்றி முடிவெடுத்துத் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

*277 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரித்து அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

* 278 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செம்பனார்கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா—

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தமிழ் நாட்டில் பல ஒன்றியங்களில், இந்த நிலைமை உள்ளது. குறிப்பாக, இந்த கும்மிடிப்பூண்டி ஒன்றியம் ஒரு தாலுகா முழுவதுமே கொண்டதாக அமைந்திருக்கிறது. ஆகவே, 62 ஊராட்சிகளைக் கொண்ட இந்த ஒன்றியத்தில் நாம் ஒதுக்கிய வேலையில்